# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.453/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : Duraisamy |
| Father/Husband's Name | : Agoram |
| Village | : |
| Taluk | : Thirutheri |
| Calling | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.09.2025.

**முதல் விசாரணை:**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த தம்பி. அவருக்கு நான் தான் 29.11.2015ம் தேதி நான் திருமணம் செய்து வைத்தேன். காரைப்பாக்கத்தில் லீஸ்சுக்கு வீடு எடுத்து, தங்கி இருந்தார். அங்கு பிரச்சனை ஆனவுடன் என்னிடம் வாடகைக்கு வீடு வேண்டுமென்று கேட்டார். நான் கட்டியிருந்த வீட்டில் ஒரு பகுதியை வாடகைக்கு கேட்டார். 6 மாதம் கழித்தும், வீட்டு வாடகையும் தரவில்லை. வீட்டையும் காலி செய்யவில்லை. 16.03.2024 தேதி சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் நான் கட்டியிருக்கும் பொது குளியல் அறையில் குளித்து விட்டு வெளியில் வந்தபோது, ஆஜர் எதிரியை பார்த்து, ஏன் இவ்வாறு கல்யாணம் செய்ததற்கு காசும் தரவில்லை என்றும், வீடும் காலி செய்யவில்லை என்று கேட்டதற்கு, உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று சொல்லி, தேவிடியா பையா என்று திட்டி, அங்கிருந்த கட்டையை எடுத்து, எனது இடது புற பின் தலையிலும், தோள் பட்டையிலும் கட்டையை வைத்து அடித்தார். தலையிலிருந்து ரத்தம் வந்தது, எனது தோள் பட்டையை தூக்க முடியவில்லை. எனது மனைவி கன்னிகா மற்றும் நான் முதலில் மறைமலைநகர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு, அதன் பிறகு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரி எனது உடன்பிறந்த தம்பி. எனது தந்தை பெயர் அகோரம் என்கிற அகோர வீரபத்திரன் என்றால் சரிதான். எனது அம்மா பெயர் மாரி என்கிற மாரியம்மாள். எனது பெற்றோருக்கு ராஜேந்திரன் என்பவர் முதல் மகன். விஜயா என்பவர் 2வது மகள். 3வது மகன் பலராமன். 4வது மகள் சாந்தி ஆவார். 5வது மகன் நான். 6வது மகள் புஷ்பா. 7வது மகன் தான் ஆஜர் எதிரி என்றால் சரிதான். எங்களுக்குள் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் நான் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளது. அது எனது பெரியப்பா எங்கள் நிலத்தை வைத்திருப்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அசல் எண்.45/2012 என்ற வழக்கை நானும், ஆஜர் எதிரியும், எனது பெரியப்பா ஏகாம்பரத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளோம். சிங்கபெருமாள் கோவில் பகத்சிங் நகரில் இருக்கும் வீட்டில், 4 பகுதிகள் உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் உள்ள அனைத்து வீடுகளும் அரசு புறம்போக்கு இடம் என்றால் சரிதான். நீர்நிலை புறம்போக்கு நிலத்தை அப்புறப்படுத்தவேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த இடத்தில் 2005 ஆண்டியிலிருந்து எனது தந்தை வீடு கட்டி அங்கு வசித்து வந்தார் என்றால் இல்லை. நான் அங்கு வீடு கட்டினேன். அங்கு என் தந்தை வசித்து வந்தார். 2005ம் ஆண்டில் எனது தந்தையுடன் தங்கி தான் கல்லூரிக்கு ஆஜர் எதிரி சென்று வந்தார் என்றால் இல்லை. அவர் உமையாள் பரனச்சேரி என்ற கிராமத்திலிருந்து தான் சென்றார். அதன் பிறகு எனது அக்கா, காரப்பாக்கத்தில் இருந்ததால் அங்கிருந்து சென்றார். உமையாள் பரனச்சேரி என்ற கிராமத்தில் எனக்கு சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தில் எனது தம்பிக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை. எனது அப்பாவின் 4 மகன்களில் ஆஜர் எதிரியை தவிர மற்ற 3 மகன்களுக்கு உமையாள் பரனச்சேரியில் வீடு உள்ளது என்றால் சரிதான். அதனால் தான் எனது தந்தை பதிவுப்படாத பத்திரத்தின் மூலம் பகத்சிங்-ல் உள்ள வீட்டை எனது தம்பிக்கு எழுதி கொடுத்தார் என்றாலும், அந்த விசயம் எனக்கு பிடிக்காததால் 2019யிலிருந்து நானும், எனது மனைவி ஆஜர் எதிரி மற்றும் அவரின் மனைவியின் மீது தொடர்ந்து தாக்கல் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. சம்பவ தேதியன்று ஆஜர் எதிரிக்கும், காயம் ஏற்பட்டு, அவர் மறைமலைநகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 17.11.2020ம் தேதி ஆஜர் எதிரி டில்லி பாத்ரூம் பிரச்சனைக்காக புகார் கொடுத்து, அதில் நாங்கள் இருவரும் சமரசம் ஆகி சென்றோம் என்றால் 3 மாத காலமாக சமரசமாக இருந்தோம். இரண்டு பகுதிகளுக்கும் ஒரே கழிவறை என்றால் சரிதான். அந்த கழிவறையை பராமரிப்பது குறித்து, பிரச்சனை ஏற்பட்டு ஆஜர் எதிரியை நான் அடித்ததாக ஆஜர் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 3 மாத காலத்திற்காக சமரசமாக செல்வதாக சொன்னோம். 20.08.2022ம் தேதி நானும், எனது மனைவி இரவு 11.00

மணியளவில் ஆஜர் எதிரியின் மனைவியை அடித்து காயப்படுத்தியாக எங்கள் மீது புகார் கொடுத்து, சிஎஸ்ஆர் எண்.2014/2022 என்ற பதிவு செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் சிறைக்கு சென்று இருக்கிறேனா என்றால் இல்லை. மறைமலைநகர் காவல்நிலையம் மட்டும் சென்று இருக்கிறேன். என் மீது DCB Kancheepuram காவல்நிலையத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறதா என்றால் எங்கள் இருவர் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது. எனது அம்மா மாரியம்மாள் ஓரகடம் காவல்நிலையத்தில் எனது அம்மாவை அடித்து, நான் அசல் ஆவணங்களை திருடி சென்றதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 06.09.2022, 10.08.2023, 30.09.2023, 16.03.2024 ஆகிய தேதிகளில் ஆஜர் எதிரியை நான் அடித்து, காயம் ஏற்படுத்தியதாக புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக நான் காவல்நிலையத்திற்கு சென்றிருக்கிறேனா என்றால் 05.01.2024ம் தேதி வீடு காலி செய்வது சம்பந்தமாக மட்டும் தான் நான் காவல்நிலையம் சென்றேன். எனது தம்பி தற்போது அந்த வீட்டில் வசிக்கிறாரா என்றால் இல்லை. 30.06.2024ம் தேதி வீட்டை காலி செய்துவிட்டார். 08.04.2024ம் தேதி, நான் மின்சாரம் மற்றும் குடிநீர் துண்டித்துவிட்டதால் அவர்களின் குழந்தையை பராமரிக்க முடியாமல், ஆஜர் எதிரியின் மனைவி என் மீது புகார் கொடுத்துவிட்டு, வாடகை வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. 08.04.2024 அதன் பிறகு, எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் இல்லை. கமிஷனர் அலுவலகத்தில் கொடுத்து இருக்கிறேன். மறைமலைநகர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் முகாந்திரம் இல்லை என்று புகார் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பேரில், நான் கமிஷனர் அலுவலகத்திற்கு தொடர்ச்சியாக சென்றதின் பேரில், எனது புகார் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தம்பி தனியாக இடம் வாங்கி, வீடு கட்டி சென்றார் என்றால் சரிதான். எனது தம்பி சென்னையில் தான் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு வேலை செல்வேன் என்றால் பொதுவாக 7 மணியளவில் சென்றுவிடுவேன். வார இறுதி நாட்களில் அவரச வேலை இருந்தால், 5 மணியளவில் சென்றுவிடுவேன் என்றால் சரிதான். எனது மனைவி வேலை செல்கிறாரா என்றால் இல்லை. 2019ம் வருடத்தில் வந்த வெள்ளத்தினால் எனது குழந்தைகள் உமையாள் பரனச்சேரியிலிருந்து பள்ளிக்கு செல்ல சிரமம் படுவதால் எனது தம்பியிடம் கேட்டு, பகத்சிங் நகரில் இருக்கும் ஒரு வீட்டை கேட்டேன் என்றால் சரியல்ல. வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, ஆகியவை எனது தந்தை பெயரில் உள்ளது என்றால் மின் இணைப்பு மட்டும் தான். எனது தம்பிக்கு திருமணம் வைத்து நடத்தியதாக சொல்லப்படும் சமயத்தில் எனது பெற்றோர்கள்

உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது இரு அண்ணன்களும் தனிக்குடித்தனம் இருந்தோம் என்றால் இல்லை. நான் எனது தந்தையுடன் தான் இருந்தேன். எனது தந்தையை நான் தான் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். எனது தந்தையின் பேரில் உள்ள சொத்துக்களை நான் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் அவர் விருப்பப்பட்டு எனக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார். திருமண செலவை நான் செய்ததாக சொல்லி, அதன் தொடர்ச்சியாக பகத்சிங் நகரில் எனது தம்பி வசிக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் நானும், எனது மனைவியும், எதிரி மற்றும் அவரின் குடும்பத்தார் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தியதால் தான் என் மீது நிறைய புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ தேதியன்று எதிரி 6.30 மணியளவில் வேலைக்கு சென்று 6.45 ரயிலில் ஏறினார் என்றால் இல்லை. அவர் இருசக்கர வாகனத்தில் தான் செல்கிறார். நான் 6 மணியளவில் வேலைக்கு செல்வதால், இவ்வழக்கு சம்பந்தமாக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பணம் தரவில்லை என்பதாலும், சொத்து பிரச்சனை இருப்பதாலும், நான் அதிகமாக சொத்தை எழுதி வாங்கியதாலும், வீட்டை காலீ செய்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடனும், ஆஜர் எதிரி நிறைய படித்தவர் என்பதாலும், கேள்விகள் கேட்பார் என்பதற்காக பொய்யான புகார் கொடுத்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது, பணத்தை திருப்பி கொடுத்தால், வழக்கை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரை நான் எழுதி இருக்கிறேனா என்றால் நான் தான் எழுதினேன். வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், முன்விரோதம் காரணமாக எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன அனைத்து சங்கதிகளையும் போலீசார் எனக்கு சொன்னார்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.